## கப்பற்றுறை அபிவிருத்தி நிதியம் - 2016

கப்பற்றுறை அபிவிருத்தி நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்கூறிய நிதிக்கூற்றுக்கள் மீது எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக ஐந்தொகையில் பதிவு செய்யப்பட்ட அல்லது செய்யப்படாத விடயங்கள் மற்றும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல் அவசியமானவையாக காணப்படுகின்றதா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 நிதியத்தின் தொடர்ச்சியான நீடிப்பு

1973 இன் 26 ஆம் இலக்க இலங்கை கப்பல்களுக்கு இட வசதிகள் ஒதுக்கும் மத்திய பணியகச் சட்டத்தின் கீழ் கப்பல் முகவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கட்டணம் மற்றும் தரகுப் பணத்தைப் பயன்படுத்தி நிதியம் உருவாக்கி துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் கீழ் நடத்தப்பட்டிருந்த போதிலும் 2006 திசெம்பர் 22 ஆம் திகதி பீஎப் 423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியச் சட்ட நிதியமொன்றென சட்டப் பின்னணி ஒன்றுடன் நடத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2011 மே 24 ஆம் திகதிய பீஈ/சீஓபீ/(4)31 பீஈஎன் இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் திணைக்கள கடிதத்தின் அறிவுரைகளின் பிரகாரம் 2011 ஆண்டின் போது நிதியத்தில் காணப்பட்ட நிதியில் ரூபா 46.47 மில்லியன் தொகையொன்று புதிய பிரயாணிகள் முடிவிடம் ஒன்று அமைப்பதற்காக முதலீடு செய்வதற்காக வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்திற்கு விடுவிக்கப்பட்ட பின்னர் நிதியத்தில் காணப்பட்ட

மீதியான நிதிசார் சொத்துக்கள் அனைத்தையும் தேறவைத்து 2011 மற்றும் 2012 ஆண்டுகளின் போது 03 சந்தர்ப்பங்களில் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட பின்னர் செயற்பாட்டு விடயங்கள் ஏதும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக நிதியத்தின் தொடர்ச்சியான நீடிப்பு ஒன்று காணப்படவில்லை.

### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

நிதியத்தில் இருந்து ஜனாதிபதி அலுவலகத்திற்கு மற்றும் கல்வி அமைச்சிற்கு முறையே வழங்கியிருந்த ரூபா 366,691,764 இற்கான மற்றும் ரூபா 946,095 இற்கான தொகை தொடர்பாக எதுவித உறுதிப்படுத்தல் ஆவணமும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியிருந்த ரூபா 55,000,000 இற்கான தொகை திறைசேரியினால் மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் பெற்றிருந்தமையினால் அதற்கு வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத் தாபனத்தின் பொறுப்பு ஒன்றல்ல என கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் சொத்துக்கள் என காட்டப்படுகின்ற ஒட்டுமொத்தப் பெறுமதியாகிய ரூபா 422,637,859 தொகைக்கான மீதிகளை உறுதிப்படுத்தல்கள் பெறப்படாமை மற்றும் உரிய நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களில் பொறுப்பு ஒன்றென காட்டப்பட்டிருக்காமையினால் நிதி அறவிடப்படல் நிச்சயமற்ற தன்மையில் காணப்பட்டது என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

2011 ஆண்டு முதல் நிதியத்தின் செயற்பாட்டு விடயங்கள் இடைநிறுத்தப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான வருமானம் மற்றும் செலவின கூற்று அல்லது திரண்ட நிதியத்தில் மாற்றங்கள் பற்றிய கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

2006 ஆண்டின் போது கப்பல் முகவர்களிடம் கட்டணம் மற்றும் தரகு அறவீடு செய்தல் நீதிமன்றக் கட்டளை ஒன்றின் மூலம் தடைசெய்யப்பட்டிருந்தமையால் நிதியத்திற்கு வருமானங்கள் கிடைத்தல் நின்றிருந்தது. மேலும், கடன்பட்டோர் தவிர ஏனைய அனைத்து சொத்துக்களும் 2011 ஆண்டின் போது பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தினால் கட்டளை ஒன்றின் மீது திறைசேரிக்கு சாட்டப்பட்ட பின்னர் நிதியத்தின் அனைத்து செயற்பாட்டு விடயங்களும் இடைநிறுத்தப்பட்டிருந்தது. 2014 நவம்பர் 05 திகதி பொது நிதி பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் நிதியத்தின் மீதியாகக் காணப்பட்ட அரச நிறுவனங்களுக்கு வழங்கியிருந்த முற்பணங்கள், பதிவழிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமென அறிவித்திருந்த போதிலும் அமைச்சினால் அவ்வாறான அங்கீகாரம் ஒன்றினை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.